420

ஸ்ரீ மாரியம்மன்பேரில்

# கீர்த்தனைப்பாமாலை.

ஜானகி ராஜாயி சாஹேப்.

-கு.)

உ

ஸ்ரீ மகமாயி துணை.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச்சேர்ந்த

நாரதாமலையில் எழுந்தருளிய

ஸ்ரீ மாரியம்மன் பேரில்

# கீர்த்தனைப்பாமாலை.

28 OCT 1920
MADRAS

புதுக்கோட்டை சமஸ்தானம்

ஜானகி ராஜாயி சாஹேப் அவர்கள்

இயற்றியது.

திரிசிரபுரம்

டீ சில்வா அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

1920.

உ

## சிறப்புப்பாயிரம்.

---

திரிசிரபுரம்

அர்ச் சூசையப்பர் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

அ. சிவப்பிரகாசர் எழுதியது.

மஞ்சுலவு நாரதா மலையில்வாழ் தேவியருண் மாரி மீதில்
நெஞ்சுருகு மிசைத்தமிழால் கீர்த்தனைப்பா மாலையுளம்
நெகிழ்ந்து சாத்தி
விஞ்சுபுக ழெய்தினள்நீள் புதுக்கோட்டை யதிபன்முன்
விளங்குஞ் சீர்த்தி
எஞ்சலிலின் மொழிபயின்ற ஜானகிரா ஜாயிநல் இறைவி மாதோ.

உ

ஸ்ரீ மகமாயி துணை.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த

நாரதாமலையில் எழுந்தருளிய

# ஸ்ரீ மாரியம்மன் பேரில்

## கீர்த்தனைப்பாமாலை.

---

## I

காப்பு—கணபதி துதி.

இராகம் ஹம்சத்தொனி.

பல்லவி.

வருவாய் எந்தன் கணபதி கதி
வரம் வேண்டினேன் வந்தருள் கதி

அநுபல்லவி.

தேவாதி தேவன் தினமருள் பூபன்
தேசோமயாநந்த மாகிய நாயன் (வருவாய்)

சரணம்.

போதாபோதம் தருகவுன் பாதம்
போற்றினேன் ஜானகி தாபிரசாதம் (வருவாய்)

## II

(மாதாட பாரதேனே என்ற வர்ணமெட்டு)

இராகம்—கமாசு

பல்லவி.

இன்னும் இரக்கமில்லையோ என்னம்மணியே

அநுபல்லவி.

அன்னம் பாலிக்கும் உந்தனடிதாள் தினம் பணிந்தும் (இ)

சரணம்.

(1) சின்னுஞ் சிறுவயதில் செய்த பிழை பொறுத்தும்
என்னையாண்டருள் செய்ய இருதாள் மலர்பணிந்தும்(இ)

(2) மன்னன்வாழ்புதுக்கோட்டைசொர்ணம்நிறைந்தநாட்டை
என்றும் நாரதகிரி ஈஸ்வரி நீயாதரி (இன்னும்

(3) பொன்னால் மகுடம் புனை புவியளந்தோன் தங்கைநீ
கன்னல்மொழி ஜானகி கவலை தீர்த்தாளவுனக் (கின்)

## III

(இராகம்—காம்போதி.

பல்லவி.

இனிநான் சகிக்கமாட்டேன்
ஏழை யென்மேல் கிருபை செய்வாய்

அநுபல்லவி.

கனிவாயுனைப் பணிந்தேன்
காத்துரக்ஷிப்பாய் தாயே (இனிநான்)

சரணம்.

(1) பிணியால் வருந்து மென்னை தனியாய் விடாதபடி
அணிவாயுனைப் பணிந்தேன் துயரகற்றி நீயருள் (இனி)

(2) ஆதி நாரதகிரி ஜோதி மெய்யான மாரி
நீதி தவறுதெந்தன் மீதில் கிருபை செய்வாய் (இனி நான்)

(3) ஆதாரமான தெய்வம் மாதாபிதாவும் நீயென்
மார்த்தாண்ட பைரவனை காத்தாண்டருள்புரிவாய் (இனி)

## IV

(இங்கிலீஷ் நோட்.)

பல்லவி.

தாயே மக மாயிநீ தயவு செய்குவாயே நீ
தாயே மக மாயி நீ தர்மகுண சீலி நீ

அநுபல்லவி.

தயாள குணமுடையாள் தங்கப் பாதத்தை
நான் பணிந்தேன் (தாயே)

சரணம்.

(1) தாயுந் தந்தையுமான தயாநிதி மாரி நீ
பேயுமிரங்கிடுமே பெண்ணென்றபோதிலுமே (தாயே)

(2) பொல்லாக்கொடுமைசெய்தேன்பொய்மயக்கமேயுய்ந்தேன்
கல்லாப்பேதையு மானேன்கருணைசெய்வாய்நீதானே (தா)

(3) ஜானகீ யுனதடியாள் தாள்பணிந்தேன் முடியால்
தாளமுடியாதம்மா தருணமேகண் பாரம்மா (தாயே)

## V

(இராகம் உசேனி.)

பல்லவி.

உந்தனடிமை நான் காத்து ரட்சிப்பாய் தாயே

அநுபல்லவி.

என் அந்தரங்கந் தெரிந்தும் ஆதரிப்பாய் நீ தாயே (உந்த)

சரணம்.

(1) ஊற்றைச் சரீரத்தை உண்மையா நம்பியேநான்
ஆற்றி னலையதைப்போல் அலையஞாயமோ தாயே (உந்)

(2) உள்ளன்பு வைத்தென்னை உலகமெல்லாம் புகழ
உதவி செய்குவாய் இனி ஒய்யாரி மகமாயி (உந்தன்)

(3) தேசம் புகழுமுன்னை ஆசையுடன் ஜானகி
பூசை செய்கிறேனுனை நேசமாய் எனைக்காப்பாய் (உந்)

## VI

(இங்கிலீஷ் நோட் கண்ணிகள்.)

(1) இனிமேலென்னை ஆதரிப்பாயென்று
ஆசையுடனே வந்தேன் தாயே

(2) இன்னு முனக்கு இரக்கமில்லையோ
ஏழை யென்மேல் கருணைவல்லையோ (இனிமே)

(3) இதுவுனக்கு தர்ம மல்லவே
இனியாகிலும் கருணை செய்வாய் (இனிமே)

(4) சூலம் தன்னை வைத்தவளும் நீ
சொருசான மகமாயி (இனிமே)

(5) மாது ஜானகி யாளுந்தன்
மலர்ப்பாதந் தினம் பணிந்தேன் (இனிமே)

## VII

(இராகம் கமாசு)

பல்லவி.

தாய்க்கு எந்தன்மீது கிருபைவர வேண்டுமே.

அநுபல்லவி.

அன்னையென் றுன்னைநான் சின்னவயது முதல்
அடுத்ததில் குறைவில்லையே (தாய்க்கு)

சரணம்.

(1) சிலம்பணிந் திடும்உந்தன் பதம் பணிந்திடும் எந்தன்
தெய்வம் என் மகமாயி (தாய்க்கு)

(2) நலம் பெற என்வினை நன்றாகத்தீர்த்துவைப்பாய்
நாயகி நீ யல்லவோ (தாய்க்கு)

(3) நாரதமலைதனில் நன்றாவிளங்கிடும் நீ
ஜானகி குறை கேளாயோ (தாய்க்கு)

## VIII

(இராகம் தோடி.)

பல்லவி.

உன்னைவிட வேறேகதி இல்லையே என் தாயே.

அநுபல்லவி.

என்னையுநீ யாதரிப்பாய் ஈஸ்வரியே மகமாயி (உன்னை)

சரணம்.

(1) அன்னையுந் தந்தையுமான அலங்கார மாரிமுத்து
பின்னை யெனக் கியாவர்துணை பிரியம்வைத்
தாள்வாய் காத்து (உன்னை)

(2) கருணைபுரிந்திலங்கும் காட்சியுடையவளை
தருணமென்வினைதீர்த்து தயவுசெய்வாய் இனி (உன்னை)

(3) அல்லும் பகலும் உன்னை சொல்லும் ஜானகிதன்னை
ஆதரிக்க வேணுமென்று அடியாளுனைப்பணிந்தேன் (உன்)

## IX

(இராகம் இந்துஸ்தானி பியாக்.)

பல்லவி.

அம்பிகை ஜெகநாயகி அருள்செய்வாய் கணநாயகி

அநுபல்லவி.

நம்பினேனுனை நாரதகிரிவாழும் (அம்பிகை)

சரணம்.

(1) ஆவலுடனே நான் அலைந்தோடி வந்திங்கு
சேவடிகண்டுநான் சிந்தை மகிழ்ந்தேனே (அம்பி)

(2) ஆநந்தமாகவே அடியாள் உனைப்பணிந்தேன்
ஞாந சங்கீதம் நான் பாடி மனமகிழ்ந்தேன் (அம்பி)

(3) ஏழை பங்காளிநீ எங்கள் குலதெய்வம்
ஏந்திழை ஜானகிக் கின்பம் உன் பொற்பாதம் (அம்)

## X.

(இராகம்—நாதநாமக்கிரியை.)

பல்லவி.

உனக்கு இது தர்மமல்லவே

அநுபல்லவி.

பட்டபாடெலாம் போதும் தாயே (உனக்கு)

சரணம்.

(1) உலகில் வந்து உதித்த நாள்முதல் ஒரு சுகமும்
உணர்ந்த தில்லையே
பாவியாகிய எந்தன் மேலே பார்த்துக்
கிருபை செய்குவாயே (உனக்கு)

(2) இன்னும் என்மேல் இரக்க மில்லையோ ஏழை என்மேல்
தயவு வல்லையோ
கண்ணால் பார்த்தால் என்கலி நீங்கும் காட்சியுள்ள
கன மகமாயி (உனக்கு)

(3) மன்னர் புகழும் மாரி முத்து நீ மனக்கவலை தீர்க்கிறவள்
மாதுஜானகிமீ திலன்பு மனதில் வைத்து அருளுவாயே(உ)

## XI

(இக்துஸ்தானி)

பல்லவி.

அம்மாளுக்கு சமம் யாரைச்சொல்வேன்.

அநுபல்லவி.

கனமது பொருந்தின காட்சியையுடையவள் (அம்மா)

சரணம்.

(1) கலக்கத்தைத் தீர்ப்பாய் கருணையாய்க்காப்பாய்
கதிதரும் உனதிரு கழலடி பணிந்தேன் (அம்மா)

(2) கிரீடந்தரித்தவள் கீர்த்தியுடையவள்
பூர்த்தியாயெந்தனை காத்திடுவாள் என் (அம்மா)

(3) மகமாயி தாயெங்கள் மாகுல தெய்வம்
மங்கை ஜானகிதன் மயக்கந் தீர்த்திடுவாள் (அம்பா)

## XII

(இராகம் காம்போதி)

பல்லவி.

அதிரூபி நீ ஆதரிப்பாய் தாயே

அநுபல்லவி.

மதிசோருதே மயக்கத்தை தீர்த்து வைப்பாய் (அதி)

சரணம்.

(1) என்னேரமும் நினைவேன் உன்பாதம்
சொன்னேன் தாயே துபரத்தை தீர்த்துவைப்பாய் (அ)

(2) மாதா வான மகமாயி நீதான்
மனம் பொறுத்து என்னை மகிழச்செய்வாய் நீ (அதி)

(3) மங்கையாளுன் மகள் ஜானகி
மகிமையுடன் மாதா துணை செய்வாய் (அதி)

## XIII

(இராகம் நாதநாமக்கிரியை)

பல்லவி.

மகிமையுடையவளே மகமாயி நீ மகிமையுடையவளே.

அநுபல்லவி.

மாட்சிமை தங்கிடும் என் ஆட்சியும் நீ
தாட்சியொன்றில்லாமல் காட்சிகொடுத்து ரட்சி (மகி)

சரணம்.

மன்னன் புதுக்கோட்டையை மகிழச்செய்வாய்
மார்த்தாண்ட பைரவன் மனக்கவலை தீர்த்துவைப்பாய்.

## XIV

(இராகம் நாதநாமக்கிரியை)

பல்லவி.

சூலாயுதக்கை மாரிநீ எந்தனைக்காப்பாய்

அநுபல்லவி.

கால காலனை வென்ற கருணையுடையவள் நீ
கோலமுடனே சிம்ம வாகனமேறியவள் நீ (சூலா)

சரணம்.

(1) எத்தனையோதரம் நான் கத்தியழைத்து முன்னே
சித்தமிரங்காதுந்தன் திருவுளச்சம்மதமோ
வரவேண்டும் தாயே வரவேண்டும் இங்கு
வரவேண்டும் வரந்தரவேண்டும் நாடி வரவேண்டும்
எனக்கு வருத்தமிது சமயம் (சூலாயுத)

(2) அல்லும் பகலுமுன்னை சொல்லு மந்திரமெல்லாம்
எல்லை புகழும் எங்கள் இனிய குலதெய்வமே
வருவாயே தாயே வருவாயே இங்கு வருவாயே
வரந்தருவாயே நாடி வருவாயே
எனக்கு வருத்தமிது சமயம் (சூலாயுத)

(3) ஆதாரமான தெய்வம் அவனியில் நீ யென்றெண்ணி
உன் பாதாரத்தை ஜானகி பணிந்தேன் கிருபையுடன்
வரவேணும் அம்மா வரவேணும் நாடி வரவேணும்
தேடி வரவேணும் வரந்தரவேணும்
எனக்கு வருத்தமிது சமயம் (சூலாயுத)

## XV

(இராகம்—கமாசு)

கண்ணிகள்.

(1) அருகினிலே வருவாய் அன்புடனே யாதரிப்பாய்
பிரியமதாக வென்தனை பிழைபொறுத்தேயாளுவாய் நீ
தாயேநீ தாயேநீ தாயேநீ (அருகினி)

(2) எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி ஏங்கிவந்தேன்
பெண்ணும் நான் செய்தவினை பிழைபொறுப்பாய் மகமாயி
தாயேநீ தாயேநீ தாயேநீ (அருகினி)

(3) சோமசுந்தரிஜொலிக்கும் சொர்ணகவச முடையாய்
நேமமுடன் ஜானகியை நேசம்வைத்து ஆதரிப்பாய்
தாயேநீ தாயேநீ தாயேநீ (அருகினி)

## XVI

(இராகம்—காம்போதி)

பல்லவி.

ஆதிவார மாமிந்நேரம் அலங்காரமே ஒய்யாரமே.

அநுபல்லவி.

ஆதிபதி பரஞ்சோதி அம்பரீ சிங்காரி கௌமாரி. (ஆதி)

சரணம்.

(1) ஆசையுடனுந்தன் அடிதொழ வந்தேன்
வாசமலர் தூவி மனமுங்கசிந்தேன்
மோசத்தினுல் என் மனமிக நொந்தேன்
மோடிசெய்யாவரம் தந்தருள் வந்தேன் (ஆதி)

(2) நாவலர்வாழ் புதுக்கோட்டை யாதினம்
நன்மையடைவ தரசர் மெய்ஞானம்
நாரத மாமலை ஓங்கிடும் வானம்
நாடி வளர்மாரி யம்மன் சன்னிதானம் (ஆதி)

(3) தேசம்புகழ் எங்கள் நேச சிங்காரி
தேவர்கள் மூவர்கள் போற்றுங் கெம்பீரி
ஆவலுடனுன்னை வாழ்த்தினேன் நேரில்
அடியாள் ஜானகியுந்தன் திருவடிமீதில் (ஆதி)

## XVII

(இராகம்—காம்போதி.)

பல்லவி.

உன்னையே நம்பினேன் அன்னையே மகமாயி

அநுபல்லவி.

என்னையா தரிப்பாய் ஏழையேன் தினமும் (உன்னை)

சரணம்.

(1) மாது ஸ்ரீ தாயென்ற மாதாவும் நீதானே
நான்படும் துன்பத்தை நன்ருகத்தீர்ப்பாயே (உன்)

(2) உன்னைவிடவேறே உற்றதுணை யாரே
ஓங்காரி யதிரூபி ஒய்யாரி மகாமாரி (உன்னை)

(3) ஜானகி யுன்பாதம் தஞ்சமென்றேன் நிதம்
பாது காப்பாய் தாயே பாடினேன் உன்சேயே (உன்)

## XVIII

(இராகம் தோடி)

பல்லவி.

தாயே எந்தன் மீது மனதுவைப்பாய்.

அநுபல்லவி.

உன்னைத்தஞ்சமென் றெண்ணினேன்
வஞ்சனை செய்யாதே (தாயே)

சரணம்.

(1) நல்லவிதமாக சொல்லித் துதிசெய்தேன்
அல்லலறுத்து நீ யாண்டருள் செய்குவாய் (தாயே)

(2) அல்லும் பகலும் நான் சொல்லும் தமிழ்ப்பதம்
எல்லாம் உன் பாதாரமல்லால் வேறேகதி (தாயே)

(3) ஆதாரமாயுன்னை அண்டினேன் ஜானகி
வேதனை தீர்த்திட வேண்டினேன் யான்ததி (தாயே)

## XIX

(இராகம்—காம்போதி)

பல்லவி.

எப்போ வருவாளோடி என்தாய் எப்போ வருவாளோடி.
அப்போதோ இப்போதோ எப்போதோ தப்பாது (எப்)

அநுபல்லவி.

எனதாருயிர்க்காதலி தேவிமகமாயி (எப்போ)

சரணம்.

(1) தேசம் புகழ்ந்திலங்கும் செயசிங்காரி
ஆசையுடன் ஜானகி யாட்கருள்வாரி (எப்போ)

## XX

திருப்புகழ்ச்சந்தக்கண்ணி.

(1) அருளே மிகுத்து வரமே கொடுக்கும்
அருள்மாரி யம்மனிருபாதம்
அடியாள் தினமும் படிதாள் பணிந்தேன்
அயராதெனைநீ அருள்வாயே.

(2) குருவா யெனக்கு தனமே கொடுக்க
குலதெய்வமெங்கள் மகமாயி
குலமே செழிக்க நலமே தருவாய்
குணமாகவுனைப் பணிந்தேனே.

(3) அகமே புளக மிகவே பெருக
அடியாள் ஜானகி படிமீது
அலையா தெனையே நிலையாக வேயுன்
வழியாகவரந் தருவாயே.

## XXI

(இராகம்—இந்துஸ்தானி

பல்லவி.

மாரியம்மனி எங்கள் மகமாயி வரந்தருவாய்

அநுபல்லவி.

காரணம் விளங்கும் பேரி
கருணைக்கண் ணுள்ளதிரி
காத்தருள் செய்திட இங்குவா நாடிவா நாடிவா (மா)

சரணம்.

(1) காவலர்க்குக் காவலடி
காத்தருள் செய்ப நீயடி
என் ஆவலுக் கினிய தெய்வம்நீ அம்மணீ அம்மணி (மா)

(2) கற்றவர் மற்றவர் தொழும்
உத்தம தெய்வம் நீயடி
என் சித்தமதி லேநீ யருள்செய் அருள்செய் அருள்செய்
(மாரி)

(3) ஆசையுடனே ஜானகி
பூசிக்கும் தெய்வம் நீயடி
தேசமே புகழ வரம்தா வரம்தா வரம்தா (மாரி)

## XXII

(இராகம்—செஞ்சுருட்டி.)

பல்லவி.

தாயே உன் சேயின்மீது தயவுசெய்குவாய் இப்போது (தா)

அநுபல்லவி.

தங்கம லர்ப்பதம் நம்பியே நான் வந்து
தாழ்ந்து பாடினேன் வாழ்ந்திட அருள்வாய் (தாயே)

சரணம்.

(1) தருண மிதுவுன் கருணைப் பாதம்
சரண மென்றுனை சார்ந்து நம்பினேன்
ஆதார மான வலங்கார ஈஸ்வரி
அஞ்சாதே யென்றெனை ஆதரிப்பாய்தநி (தாயே)

(2) தயாநிதி யென்றுனை நம்பினே னிப்போ
தயவுடனென்னை யாதரிப்பாயே
கருணை பொருந்தி காட்சி தருவாய்
கடைக்கண்ணால் பார்த்தென்னை கண்டு மகிழ்வாய் (தா)

(3) தர்ம குணமிக நிறைந்தவள் நீ
தாமதியாமல் தக்கவரந்தந்து
தாழவிடா தெனை யாளவும் வேண்டினேன்
தஞ்சமென்றுந்தனை கெஞ்சினேன் ஜானகி. (தா)

## XXIII

### கும்மி.

(1) கும்மியடி பெண்கள் கும்மியடி யுங்கள்
கூந்தல் சோர்ந்திடக் கும்மியடி
நம்மை யாளும் நாரதகிரி மாரியுமை
நாயகியைத் தினம் பாடுங்கடி.

(2) அருமைக் குளமும்நல் லாகாச கங்கையும்
அமைந்த அழகை நான் என்னசொல்வேன்
அருமை யாகவே என்தாய் மகமாயி
ஆலயத்தே வந்து பாருங்கடி.

(3) ஆதார மானவென் தாய்மாரி யம்மனை
அல்லும் பகலுமே சொல்லுங்கடி
பாதார விந்தத்தை நம்பின ஜானகி
பாடிய செந்தமிழ் பாடுங்கடி.

(4) மல்லிகை முல்லை மலர்மணக்கும் என்தாய்
மாரிமுத்து மலர்ப் பாதமதில்
மல்கவே எண்ணிநான் சாத்திய செந்தமிழ்
மாலை மணக்கவும் பாருங்கடி.

(5) ராஜாதி ராஜர்கள் போற்றுங் கெம்பீரனும்
நஞ்செய்கள் சூழ்புதுக்கோட்டை மன்னன்
தேசத் தழகன் மார்த்தாண்ட பைரவனை
தேவி காக்கவே வேண்டுங்கடி.

## XXIV

### சிந்து.

அம்மா ஒரு சேதி கேளாய்—உந்தன்
அடிமை நான் செய்துவந்த நடத்தை யெல்லாம்
ஆண்டவள் நீ அறிவாய்—உனக்கு
ஆதியோடந்தமாய் சொல்லுவனோ
இதுவரை கஷ்டமெல்லாம்—உனக்கு
இன்னும் நானெடுத் தியம்புவனோ
ஈஸ்வரி பிழைபொறுப்பாய்—உந்தன்
ஈகையாலிப்போ தாண்டிடுவாய்
உத்தமக் குலக்கொழுந்தே—எங்கள்
உரிமை தனக்கினிய குலதெய்வமே
ஊர்புகழ் மாரிமுத்தே—உன்பாதம்
உறுதியாய் ஜானகி தலையில் வைத்தேன் (தனதோம்
தனதந்தினா)

## XXV

பல்லவி.

நீதி தவறா ரூபவதிக்கு நித்யா நந்த மங்களம்

அநுபல்லவி.

நீண்ட காலம் வாழ்வுதரும் நிமலதேவி மகமாயி (நீதி)

சரணம்.

நாரத மலைவாழ் நாயகிதன் நலமகிழ் ஜானகி
நாடும் வரந்தரும் (நீதி)

முற்றிற்று.